செ.வெ.எண்: 201 நாள்: 20.03.2019

**தேர்தல் கண்காணிப்பு குழுவினருக்கான கலந்தாய்வு கூட்டம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர்**
**திரு.ஆ.அண்ணாதுரை இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

தஞ்சாவூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேர்தல் கண்காணிப்பு குழுவினருக்கான கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.ஆ.அண்ணாதுரை,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேர்தல் செலவின பார்வையாளர்கள் திரு.மண்டுகுமார்தாஸ் மற்றும் திரு.பிரகாஷ்நாத்பன்வால் ஆகியோர் முன்னிலையில் இன்று (20.03.2019) நடைபெற்றது.

கலந்தாய்வு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.ஆ.அண்ணாதுரை,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது :

உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்படும் பணம் மற்றும் இதர மதிப்பு வாய்ந்த பொருட்களை பறக்கும்படைகுழு மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவில் உள்ள தேர்தல் கண்காணிப்பு அலுவலர்கள் கண்டறிந்து கைப்பற்ற வேண்டும். வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடமிருந்து விபரங்களை பெற்று தங்களின் பகுதியில் முறை கேடாக பணம் பறிமாற்றம் நடைபெறுவதை தடுக்க வேண்டும். ˙. பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் தேர்தல் தொடர்பான புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் உடனடியாக சம்பந்தப்பட்ட இடத்திற்கு விரைந்து செல்ல வேண்டும். பறக்கும்படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழுக்களின் இயக்கம் தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் GPS கருவி மூலம் கண்காணிக்கப்படுகிறது. கைப்பற்றப்படும் ரொக்கத்தொகை மற்றும் இதர பொருட்கள் குறித்து உடனடி அறிக்கை கொடுத்திட வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.ஆ.அண்ணாதுரை இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ந.சக்திவேல், தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.சுரேஷ் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.